DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.19**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சண்முகம் |
| Father Name | : | மாணிக்கம் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 6, 8, 10, 13, 14, 15, 16, மற்றும் 17 எதிரிகள் ஆஜர். 5, 9, 12 மற்றும் 18 எதிரிகள் ஆஜர் இல்லை. 5, 9, 12 மற்றும் 18 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை மேலமாசி வீதியில் வசித்து வருகிறேன். நான் வெற்றிவேல் என்ற பெயரில் இருசக்கர வாகன ஒர்க் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. போலீஸார் எனது ஒர்க் ஷாப்பிற்கு வந்து ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் வெற்றிவேல் என்ற பெயரில் கீழமாரட் வீதியில் கதவு எண்.131ல்

இருசக்கர வாகன ஒர்க் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன் என்றும், தினசரி காலை 09.00 மணிக்கு கடையை திறந்து இரவு 11.00 மணி வரை கடையில் வேலை பார்ப்பேன் என்றும், 31.01.2013ம் தேதி இரவு 09.45 மணியை போல் நான் கடையில் இருந்த போது, சிந்தாமணி ரோட்டை சேர்ந்த சந்தானம் என்பவர் TN 58 W5281 என்ற சிவப்பு கலர் பல்சர் வண்டியை கொண்டு வந்து சர்வீஸ் செய்து கொடுக்க சொன்னார் என்றும், நான் வண்டியை பார்த்த போது வண்டியில் இரத்தம் பட்டும், இடது பக்க பேட்டரி பாக்ஸ் கவரும் இல்லாமல் இருந்ததால் சந்தானத்திடம் நான் என்ன வண்டியில் இரத்தமாக இருக்குது, கவரையும் காணவில்லை என்று கேட்டேன் என்றும், அதற்கு அவர் நான் கீழே விழுந்து அதனால் கையில் காயம்பட்டு அதில் வந்த இரத்தம் வண்டியில் பட்டுவிட்டது என்று சொன்னார் என்றும், பிறகு நான் வண்டியை சர்வீஸ் செய்து சுத்தப்படுத்தி வைத்திருந்தேன் என்றும், இந்த நிலையில் 06.02.2013ம் தேதி மதியம் 02.00 மணிக்கு போலீஸார் சந்தானத்துடன் எனது ஒர்க்  ஷாப்பிற்கு வந்தார்கள் என்றும், ஒர்க் ஷாப்பில் வைத்து சிவப்பு கலர் பல்சர் வண்டியை சந்தானம் போலீஸாரிடம் அடையாளம் காண்பித்தார் என்றும், உடனே இந்த வண்டி பொட்டு சுரேஷ் கொலை கேஸில் சம்மந்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள் என்றும், உடனே TN 58W 5281 என்ற சிவப்பு கலர் பல்சர் வண்டியை நான் தங்களிடம் ஆஜர்படுத்தினேன் என்றும், அதை மாடக்குளம் கிராம நிர்வாக அலுவலர் **சாட்சி எண்.75** செல்லபாண்டி முன்பும், கிராம உதவியாளர் **சாட்சி எண்.76** முருகன் முன்பும் அத்தாட்சியில் கைப்பற்றினீர்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.03 17:11:05 +0530